දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister
2784832
Fax: 2784825

ලේකම්
செயலாளர்
Secretary
2784812

කාර්යාලය
அலுவலகம்
Office
2785141-50
Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.

ඔබේ අංකය
உமது இல.
Your No. ..........................

මගේ අංකය
எமது இல.
My No. ED/01/14/04/05

දිනය
திகதி
Date 2010.03. 10

**சுற்றறிக்கை இல : 2011/09**

தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
பரீட்சை ஆணையாளர் நாயகம்
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல அதிபர்கள்.

**<u>க.பொ.த(உ.த) 2011 விஞ்ஞான பாட விதானத்தின் ஒருசில பாடப் பிரிவுகளை நீக்குதல்</u>**

கல்வி அமைச்சு தேசிய கல்வி நிறுவகத்துடன் நடாத்திய கலந்துரையாடல் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு க.பொ.த(உ.த) இரசாயனவியல் மற்றும் உயிரியல் பாடவிதானத்தின் ஒருசில பிரிவுகள் 2011 க.பொ.த(உ.த) பரீட்சையில் மதிப்பீட்டிற்குட்படுத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டில் க.பொ.த(உ.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட அப்பாடப்பிரிவுகள் பாடசாலைகளில் கற்பிக்கவேண்டிய அவசியமில்லை என்பதுடன் 2011 க.பொ.த(உ.த) பரீட்சைக்காக அப்பாடப் பிரிவுகள் எதனையும் உள்ளடக்காதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுதொடர்பாக சகல ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களையும் அறிவுறுத்துவதற்காக அதிபர்களுக்கு இதன் மூலம் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது.

2011ஆம் ஆண்டில் மதிப்பீட்டிற்குட்படுத்தப்படாத பாடங்களின் பகுதிகள்.

<u>உயிரியல்</u>

இறுதிப் பிரிவான உயிரியல் (14ஆம் பகுதி)

<u>இரசாயனவியல்</u>

<u>பிரிவு பிரிவின் பெயர்</u>

13.1 பதார்த்தம் ஒன்றில் அடங்கும் திரவ அளவினை மதிப்பீட்டிற்குட்படுத்துவதற்கான அளவையியல் பயன்பாடு

13.4 பல்வகை கலங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளல்.

13.5 இலத்திரனியல் கலவையின் இலத்திரனியல் கலத்தை இரசாயன சக்தியாக மாற்றியமைக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளவேண்டிய தேவைகளை இனங்காணுதல்.

13.9 தொழில்நுட்ப ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக இலத்திரனியல் உலோக ஆய்வுகள்

14.4 இரசாயன ஆய்வுகளுக்காக ஈர்ப்பு மற்றும் நிறக்கலவைகளை பயன்படுத்துதல்.

14.5 திண்ம இரசாயன கலவைகளை தூய்மைப்படுத்தும் முறைகளைப் பயன்படுத்துதல்.

14.9 முறைமையில் உள்ள நேர் முனை மற்றும் எதிர் முனை தன்மைகளை அடிப்படையாகக் கொண்ட சமநிலையின் போது PH பெறுமதியை நிர்ணயித்தல்.

14.13 பொருட்களை வேறுபடுத்துவதற்காக வர்ணக் கலவை முறைகளைப் பயன்படுத்துதல்.

14.14 இரசாயன ஆய்வுகளுக்காக பரிமாண அலகுகளை பயன்படுத்துதல்.

15.5 தாவர வகைகளை அடிப்படையாகக் கொண்ட ஒருசில இரசாயன கைத்தொழில் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

15.6 கனியவளத்தை அடிப்படையாகக் கொண்ட ஒருசில இரசாயன கைத்தொழில் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

15.7 தொழில்நுட்ப உற்பத்திகள் மற்றும் சேவை வளங்களின் போது நனோ பரிணாமத்தின் முக்கியத்துவத்தை வினவுதல்.

16.3 வாயு மண்டலத்தின் சிறந்த உள்ளீடுகளை பேணுவதற்காக நடவடிக்கைகளை எடுத்தல்.

16.4 நிலத்திற்குக் கீழுள்ள நீர் மற்றும் பூமியில் உள்ள நீரின் உள்ளீடுகளை பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

16.5 விவசாய இரசாயன பொருட்கள் மூலம் ஏற்படக்கூடிய சூழல் பாதிப்புக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

16.6 நீரின் அளவினை தீர்மானிக்கக்கூடிய திரவப் பொருளை இனங்காணுதல்.

16.7 கழிவு முகாமைத்துவத்திற்காக இரசாயனவியல் அறிவினை பயன்படுத்துதல்.

**எவ்.எம்.குணசேகர**
செயலாளர்,
கல்வி அமைச்சு.